**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.399/2025 இ.ம.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்பிரமணி | வட்டம் | : | கொடுமுடி |
| த/பெ | : | ராமசாமி | மாவட்டம் | : | ஈரோடு |
| க/பெ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | கொந்தளம் | வயது | : | 61 |

**வா.சா.1: முதல் விசாரணை**:-

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன்.

09.11.2011-ம் தேதியிட்ட கிரயப் பத்திரம் (சான்றிட்ட நகல்) **வா.சா.ஆ.1** ஆகவும், 12.11.1987-ம் தேதியிட்ட கிரயப் பத்திரம் (சான்றிட்ட நகல்) **வா.சா.ஆ.2** ஆகவும், 04.06.2025-ம் தேதியிட்ட மொடக்குறிச்சி கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று (அசல்) **வா.சா.ஆ.3** ஆகவும், 04.06.2025-ம் தேதியிட்ட மொடக்குறிச்சி ரீ.ச.எண்.183 புல வரைபடம் (உண்மை நகல்) **வா.சா.ஆ.**4 ஆகவும், 04.06.2025-ம் தேதியிட்ட மொடக்குறிச்சி கூட்டு வரைபடம் (உண்மை நகல்) **வா.சா.ஆ.5** ஆகவும், 04.06.2025-ம் தேதியிட்ட மொடக்குறிச்சி "அ" கிராமம் ரீ.ச.எண்.183/1**L** பட்டா

(இணையவழி பெற்ற நகல்) **வா.சா.ஆ.6** ஆகவும், 04.06.2025-ம் தேதியிட்ட மொடக்குறிச்சி "அ" கிராமம் ரீ.ச.எண்.183/1L அ பதிவேடு (இணையவழி பெற்ற நகல்) **வா.சா.ஆ.7** ஆகவும், 01.05.2022-ம் தேதியிட்ட சின்னம்மாள் இறப்பு சான்றிதழ் (கணினி நகல்) **வா.சா.ஆ.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.